1987 நவம்பர் 11]

கோரிக்கையை மாநில அரசு முன் வைத்திருக்கிறதா அல்லது முன் வைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, 50 சதவிகிதம் அல்ல, 100 சதவிகிதமும் தமிழ்நாட்டின் மின் பற்றாக்குறையை போக்குவதற்காக கொடுக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறோம். மத்திய அரசு இசைவு தரவில்லை.

கோயில்களில் பரம்பரை தர்மகர்த்தாக்கள் முறை.

56—(*வினா எண் 13734) திருமதி டி. யசோதா: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோயில்களில் பரம்பரை தர்மகர்த்தாக்கள் முறை ஒழிக்கப் படுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, பரம்பரை அறங்காவலர் முறையை நீக்குவது பற்றிய கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திருமதி டி. யசோதா: பேரவைத் தலைவர் அவர்களே, கோயில்களுடைய அதிகப்படியான நிலங்களும் அதனுடைய வருவாயும் நல்ல காரியங்களுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் போய் சேருவதற்கு இந்த பாம்பரை தர்மகர்த்தா முறை தடையாக இருப்பதால் அதிலே அரசாங்கம் மிக வேகமாக நடவடிக்கை எடுத்து இதனை முடிவுக்கு கொண்டுவர முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அவர்கள் அரசு இது விஷயமாக அவசரப்பட்டு மிக முக்கியமான ஒரு மசோதாவை கூட நிறைவேற்றி அனுப்பியிருக்கிறது. இன்னும் மைய அரசுதான் குடியரசுத் தலைவர் மூலமாக இசைவு அளிக்கவில்லை. இசைவு அளித்தால் தம்பிரான் என்ற பெயரால் அறங்காவலர்களாக இருந்துக் கொண்டு பல ஆயிரக்கணக்கான நிலங்களும் மற்றும் உள்ள சொத்துக்களும் இருக்கும்போது அவர்களுடைய வாரிசுகள் யார் என்று கூட தெரியாமல் வழக்கு மன்றத்திற்குப் போகிறார்கள். நிலம் இருந்தும் அவர்களால் அந்தப் பணத்தை வசூல் செய்ய முடியவில்லை. குறிப்பாக நாம் போகிறபோது கோயில்களின் விளக்கு எரியவில்லை என்று சொன்னால், பொதுமக்களுக்கு அது யாருடைய கோயில் என்று தெரியாமல்—பொதுவாக கோயில்

என்றாலே அறநிலையத் துறைதானே பார்க்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். இதை மாற்றுவதற்குத்தான் மசோதா ஏற்கெனவே நிறைவேறியிருக்கிறது. குடியரசுத் தலைவர் இசைவு தரவேண்டும். பல தடவை கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

திருமதி டி. யசோதா: பேரவைத் தலைவர் அவர்களே, குடியரசுத் தலைவர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவராக இருக்கின்ற காரணத்தினாலும், தமிழக முதல்வருடைய பேரன்பிற்கு பாத்திரமானவர் என்கின்ற நிலையிலேயும் இதனை நம்முடைய தமிழக முதல்வர் அவர்களும், இந்தத் துறையைச் சார்ந்த அமைச்சர் அவர்களும் அதிகமான அக்கறை எடுத்து நிறைவு செய்வதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, முன் வரும்.

(முற்பகல் 11-10)

திரு. ஜி. கே. ஜெ. பாரதி: மாண்புமிகு பேரவையின் தலைநாயகர் அவர்களே, பரம்பரை அறங்காவலர்கள் ஒழிக்கப்படும் என்பதற்கு இடைக்காலச் சட்டங்களை உருவாக்க வேண்டும் என்று அரசு நினைத்தாலும்கூட, அறங்காவலர்களை நீக்குவதற்கு முன்பாக சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் மற்றவர்கள் உட்பட சேர்த்து தாங்கள் அறங்காவலர்களை அமைப்பீர்களா? மேலும் என்னுடைய திருவொற்றியூர் கோயில் நரசிம்ம பல்லவனால் கட்டப்பட்டது. மகேந்திரவர்மனாலும் கட்டப்பட்டது. அதை இடையிலே இருக்கிறவர்கள், பரம்பரை அறங்காவலர்கள் என்று சொல்லிக்கொண்டு, அந்த நிர்வாகத்தைச் சீரழிக்கின்றார்களே, அதை நீக்குவதற்கு விரைவான நடவடிக்கை ஏன் எடுக்கப்படக்கூடாது. நீதிமன்றங்களிலே சென்று அவர்கள் தடை வாங்குகிறார்களே, அந்தத் தடையை நீக்குவதற்கு— அடிப்படை உரிமை என்கின்ற ஒரு தடையினை சுப்ரீம் கோர்ட்டிலே ஒரு பரம்பரை அறங்காவலர் வாங்கி இருக்கிறார்— அதைப்போன்ற ஒரு நிலை வருகின்றபோது, சட்டத் திருத்தத்தை உடனடியாகச் செய்வீர்களா என்பதை இந்தப் பேரவையின் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே. இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை பற்றிய அந்தச் சட்டத்தைத் திருத்துவதற்கு விதிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அது

1987 நவம்பர் 11]

கன்கரன்ட் லிஸ்ட் என்பதனால், மைய அரசுடன் கலந்துகொண்டு அடுத்து வருகிற சட்டசபை நிகழ்ச்சியில் அவைகள் சட்டசபை முன் வைக்கப்படும்.

திரு. தி. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆந்திராவில் மகந்துகளை ஒழித்தது போலவும், உத்திரப் பிரதேசத்தில் காசி விஸ்வநாதர் ஆலயத்தில் இருக்கின்ற பரம்பரை அறங்காவலர் குழுவை தனிச் சட்டத்தின் மூலமாக நீக்கியதைப் போலவும், சற்று கடுமையான நடவடிக்கை எடுத்து, தனிப்பட்ட முறையிலே ஆயிரக்கணக்கான நிலங்களையும், விலைமதிப்பற்ற சொத்துக்களையும் அனுபவித்துக் கொண்டு இருக்கிற அறங்காவலர்கள், தர்மகர்த்தாக்களை ஒழிப்பதற்கு அரசு மிக விரைவான முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற கருத்தையும் இணைந்துத்தான் அந்தத் திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. வருகிற சட்டசபையில் அதுபற்றி வைக்கப்படும்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, அவர்களே, 1967-க்கு முன்பு இருந்ததைப் போல, தற்போதும் ஆலயங்களில் சட்டமன்ற உறுப்பினர்களை அறங்காவலர்களாக நியமிக்கும் குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களை அறங்காவலர்களாக நியமிக்கக் கூடாது என்ற நிலை இல்லை. ஆகவே, இருக்கலாம்.

திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு சார்பில் நியமிக்கப்படுகிற நிர்வாக அலுவலர்களிடத்தில், பாரம்பரை அறங்காவலர்கள் ஆலயத்திற்குச் சொந்தமான சொத்து விவரங்களைக் காண்பிக்க வேண்டும் என்று அரசு கட்டாய உத்தரவு ஏதேனும் பிறப்பித்துள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொத்துக்களைப் பொறுத்தவரையில், பட்டியல்களை நிர்வாக அலுவலர்களுக்குக் காட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

[1987 நவம்பர் 11

திரு. த. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது பல கோயில்களுக்கு அறங்காவலர் குழுக்கள் இல்லை. அங்கு அறங்காவலர் குழு உடனடியாக நியமிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, டி.சி., ஏ.சி. மற்றும் அவைரல்லாமல் மாவட்ட மண்டலக் குழு அமைக்கிற எல்லா வகைக் கோயில்களுக்கும் அறங்காவலர் குழு நியமிக்கப்பட்டு வந்து கொண்டிருக்கிறது.

தாட்கோ மூலம் வீடுகள் கட்டும் திட்டம்.

57—(*வினா எண் 9799) திரு. கே. அன்பழகன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியங்களிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு 1986-87 ஆம் ஆண்டில் தாட்கோ மூலம் வீடுகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் சேலம் மாவட்டம், ஓமலூர், காடையாம்பட்டி ஒன்றியங்களிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு 1986-87 ஆம் ஆண்டு தாட்கோ மூலம் வீடுகள் கட்டுவதற்கு மானியம் வழங்க செயற்குறிப்பு ஒன்றை அனுப்பியுள்ளார். அது அரசின் பரிசீலனையில் உள்ளது. மேற்படி ஒன்றியங்களிலுள்ள கிராமங்கள் தெரிந்தெடுக்கப்பட்ட பின் இது பற்றி ஆணை வெளியிடப்படும்.

கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக ஆதிவாசிகளுக்கு கறவை மாடுகள் வழங்கும் திட்டம்.

58—(*வினா எண் 10394) திரு. கே. உச்சி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், உதகை வட்டம், ஆலணகட்டி பகுதியில் உள்ள ஆதிவாசி மக்களுக்கு, கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக கறவை மாடுகள் வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயல்படுத்தப்படும்?